சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண்.** 51/2022 (Joint Trial with OS. 268/2022)

பெயர் - மணிவசாகம் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :05.03.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வாதிகள் அனைவருக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். எனது பாட்டனார் வாங்கிய சொத்தை 1, 2 பிரதிவாதிகள் 2013 ல் அவர்கள் பெயரில் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார்கள் சொத்திற்கான பட்டா எங்கள் பெயரில் மாற்றி உள்ளோம் அதன் அடிப்படையில் ஆவணத்தில் எங்கள் பெயரை கொண்டுவர வழக்கு போட்டுள்ளோம். இந்த வழக்கிற்கு முன்பே முதல் பிரதிவாதி சீர்காழி மாவட்ட உரிமையயில் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான் அது OS. 323/2018 தற்போது OS. 268/2022 இந்த நீதிமன்றத்தில் உள்ளது. அந்த வழக்கில் கண்ட சொத்துக்களை நாங்கள் இடையூறு செய்யகூடாது என்று IA. 1123/2018 ல் உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் பேரில் மேல் முறையிடு செய்தேனா என்றால் அதற்காக தான் இந்த வழக்கு போட்டுள்ளேன். அந்த உத்தரவு நாளது தேதி வரை நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவின் படி முதல் பிரதிவாதியின் அனுபவத்தில் நாங்கள் இடையூறு செய்யவில்லை என்றால் சொத்து எங்களிடம் தான் உள்ளது. நீதிமன்ற உத்தரவை மதித்து நடக்கிறோம். IA. 1123/2018 உத்தரவின் படி மதித்து நடத்து வருகிறோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 1 ஆவணம் தேனப்பன் மற்றும் சொக்கலிங்கம் என்பவர்களால் 1922 ல் கிரயம் பெறப்பட்டது. அசல் எங்களிடம் உள்ளது. தேவைபட்டால் தாக்கல் செய்கிறேன். அதில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்று நினைக்கிறேன். தற்போது சாட்சி மீண்டும் வா.சா.ஆ. 1 யை பார்த்து விட்டு சர்வே எண். 591 என்று உள்ளது என்று கூறுகிறார். மேற்படி நபர்கள் புல எண். 591 யை கியரம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் கிரய எண். 591 தான். என் வழக்குரையில் அந்த சர்வே எண் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புதிய சர்வே எண் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சர்வே எண் பழைய சர்வே எண். 591 என்பதற்கு மாவட்ட

வருவாய் அலுவலர் பட்டா மாறுதல் உத்தரவு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்திற்கும் வா.சா.ஆ. 1க்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொக்கலிங்கம் இறந்துவிட்டார். தேனப்பனும் இறந்து வீட்டார். சொக்கலிங்கம் மற்றும் தேனப்பன் வாரிசு சான்று போட்டுள்ளோம். அவற்றை வழக்கில் குறியிடுசெய்துள்ளோம். சொக்கலிங்க மகன் சாந்தப்பசெட்டியார். சொக்கலிங்கம் மனைவி பெயர் வள்ளியம்மையாச்சி. சாத்தப்பன் மனைவி முத்தாத்தாள். சாத்தப்பன் மகன்கள் சொக்கலிங்கம், அழகப்பன். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் நான்கெல்லை சான்று நகல் என்பதால் சரியாக தெரியவில்லை. அசல் ஆவணத்தை எடுத்துவர தயாராக உள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**